# சவூதியில் ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை இஸ்லாத்தின் பண்புகளை சிதைக்கும் வெறும் காட்டுமிராண்டித்தனம்

## லத்தீப் பாரூக்

உலகில் சர்வாதிகாரத்தன்மை மிக்க நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியா 2022 மார்ச் 12ல் ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றி உள்ளது. உலகின் கவனம் யுக்ரேன்-ரஷ்ய யுத்தத்தில் மூழ்கியிருந்த வேளையில் இந்தத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பயங்கரவாதம், கடத்தல், கற்பழிப்பு, ஐஎஸ் பயங்கரவாத அமைப்பில் அங்கத்துவம் பெற்றிருந்தமை என்பனவே இவர்கள் மீதான குற்றச்சாட்டாகும்.

இது முழுக்க முழுக்க காட்டுமிராண்டித் தனமான செயலாகும். புனித இஸ்லாத்துடனோ அல்லது இஸ்லாமிய நீதி முறை கட்டமைப்புடனோ இதற்கு எந்த சம்பந்தமும் இல்லை. மாறாக இஸ்லாத்தின் உன்னதமான பண்புகளை சிதைக்கவும் அதன் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கவும் அதன் மூலம் அமெரிக்காவினதும் மேற்குலகினதும் இஸ்லாம் விரோத பிரசாரத்துக்கு துணை போகவுமே இது வழியமைக்கும்.

வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக இருந்த ஜமால் கஷோகி 2018ல் துருக்கியில் உள்ள சவூதி தூதரகத்துக்குள் மூர்க்கத்தனமாக கொல்லப்பட்டதை அடுத்து சவூதி அரேபியாவின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் உலகளாவிய மனித உரிமை அமைப்புக்களின் தீவிர கவனத்தை ஈர்த்திருந்தன. இந்தப் படுகொலைக்கான உத்தரவுகளை வழங்கியவர் சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் தான் என்று அமெரிக்க புலனாய்வு துறை உறுதியாக நம்புகின்றது. யெமனில் தற்போது சவூதி அரேபியா தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை மேற்பார்வை செய்தவாறே அவர் இந்தப் படுகொலைக்கும் உத்தரவிட்டுள்ளார்.

சவூதி அNபியா தற்போது நிறைவேற்றி உள்ள மரண தண்டனைகளைக் கண்டித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்சல் பெச்சலட் மரண தண்டனைகளை நிறுத்துமாறு சவூதி அரேபிய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். சரியான நியாயமான விசாரணை உத்தரவாதங்களை நீதிமன்றங்கள் வழங்காத நிலையில் மக்களது தலைகள் துண்டிக்கப்பட்டால் அங்கு போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாகக் கருத இடமுண்டு.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் கருத்துப்படி தலை துண்டிக்கப்பட்டவர்களில் 41 பேர் ஷீஆ பிரிவை சேர்ந்தவர்கள். இவர்கள் சவூதியில் சிறுபான்மையினராக வாழுகின்றனர். 2011-2012 காலப் பகுதியில் அங்கு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள். இன்னும் ஏழு பேர் யெமன் தேசத்தை சேர்ந்தவர்கள். ஒருவர் சிரியா நாட்டு பிரஜை.

"எமது கண்கானிப்புகளின் படி விசாரணைகளின் பின் தண்டனை நிறைவேற்றப்பட்ட பலர் நியாயமான நீதிமன்ற விசாரணைகளுக்கு உற்படுத்தப்படவில்லை. முறையான நீதிச் செயற்பாடுகளுக்கு உரிய சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் கூட சர்வதேச சட்டங்களின் படி வேண்டப்படும் மிகவும் பாரதூரமான குற்றங்களின் வரம்புக்குள் காணப்படவில்லை. சில மரண தண்டனைகள் தற்போது யெமனில் இடம்பெற்று வரும் மோதல்களின் அடிப்படையில் அவற்றோடு தொடர்புடையதாக இருக்கலாம் என்று நான் கருதுகின்றேன்

சரியான மற்றும் நியாயமான முறையில் வேண்டப்படும் விசாரணை உத்தரவாதங்களை நீதிமன்றங்கள் வழங்காத நிலையில் நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களாலும் மனிதாபிமான சட்டங்களாலும் தடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் போர்க் குற்றங்களாகவே கருதப்படும்.

மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளுமாறு சவூதி அதிகாரிகளை நான் வேண்டிக் கொள்கிறேன். மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவது உடனடியாக நிறுத்தப்படுவதோடு அந்தத் தண்டனைகள் விதிக்கப்பட்டவர்களுக்கு அவை குறைக்கப்பட வேண்டும்" என்று ஐ.நா ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். அத்தோடு சவூதி அரேபியாவின் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை முழுமையாக சர்வதேச சட்டங்களுக்கு இசைவுடயதாக ஆக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

லண்டனைத் தளமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமை குழுவான றிப்ரீவ் என்ற அமைப்பு மனச்சாட்சிப் படியான கைதிகள் விடயத்தில் நாம் அச்சம் கொண்டுள்ளோம், சிறுவர்களாக இருக்கும் போது கைது செய்யப்பட்ட தனிநபர்களும் சவூதியின் மரண தண்டனை வரிசையில் உள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

‘சவூதியின் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மறுசீரமைப்புத் திட்டங்கள் பற்றி உறுதி வழங்கியது முதல் இரத்த ஆறு ஓடத் தொடங்கியுள்ளது என்பதை உலகம் இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும்’ என்று றிப்ரீவ் அமைப்பின் பிரதிப் பணிப்பாளர் சொரயா போவன்ஸ் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய சவூதி அமைப்பின் பணிப்பாளர் அலி அபூபூஸி மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட சிலர் சித்திரவதைகளை அனுபவித்துள்ளனர். அவர்களுக்கு எதிரான விசாரணைகள் மிக இரகசியமாக இடம்பெற்றுள்ளன என்று குற்றம் சாட்டி உள்ளார். இந்த மரண தண்டனைகள் யாவும் நீதிக்குப் புறம்பானவை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முஹம்மத் பின் சல்மான் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் சவூதியின் ஆட்சி பீடத்தில் அமர்ந்தது முதல் பாரிய அளவிலான மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளமை இது முதல் தடவை அல்ல. 2019ல் தடுத்து வைக்கப்பட்டிருந்த 37 பேருக்கு பயங்கரவாத குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இவர்களில் அதிகமானவர்கள் ஷீஆ பிரிவை சேர்ந்தவர்கள்.

வளைகுடா விவகாரங்களுக்கான அமெரிக்க நிறுவனத்தின் மற்றும் அரபு உலகுக்கான ஜனநாயகக் குழு என்ற அமைப்பின் செயற்பாட்டாளரான அலி அல் அஹமட் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களில் 36 பேருக்கும் அதிகமானவர்கள் ஷீஆ பிரிவினர் எனறு தாங்கள் நம்புவதாகவும்; தெரிவித்துள்ளார். எண்ணெய் வளம் மிக்க சவூதி அரேபியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் ஷீஆக்கள் பிரதானமாக வாழ்ந்து வருகின்றனர். தாங்கள் இரண்டாம் தர பிரஜைகளாகவே கணிக்கப்பட்டு வருவதாக அவர்கள் நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகின்றனர். ஷீஆக்கள் மீதான இந்த மரண தண்டனை நிறைவேற்றம் பிராந்திய ரீதியான அமைதியீனத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

அதிகாரத்தை தனது கரங்களில் எடுத்தது முதல் முடிக்குரிய இளவரசர் சல்மான் தனது நாட்டில் இஸ்லாமியக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாற்றமாக மேலைத்தேச நவீன மயப்படுத்தல் திட்டங்களைத் தீவிரப்படுத்தி உள்ளார்.

இஸ்லாத்தை அவமதித்தார் என்ற குற்றத்தின் பேரில் 10 வருடங்கள் சிறைத் தண்டனையும் ஆயிரம் கசையடிகளும் தண்டனையாக விதிக்கப்பட்ட றாயிப் பதாவி என்ற இணைய எழுத்தாளர் தண்டனை

முடிந்து விடுதலை செய்யப்பட்ட அடுத்த நாள் தான் இந்த மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் பதாவிக்கு 50 கசையடிகள் மட்டும் தான் தண்டனையாக வழங்கப்பட்டது. உலகளாவிய கண்டனத்தை அடுத்து அது இடை நிறுத்தப்பட்டது. இப்போது அவருக்கு பத்தாண்டுகள் பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. 38 வயதான இந்த நபர் தற்போது கனடாவில் வசித்து வரும் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளோடு சேர்ந்து வாழ்வது இப்போது தடுக்கப்பட்டுள்ளது. இவர் கைது செய்யப்பட்டதை அடுத்து சவூதியில் வாழ அச்சம் கொண்டு குடும்பத்தவர்கள் அங்கிருந்து வெளியேறி கனடாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள மனித உரிமை காவலர்கள் உற்பட பலர் சவூதியின் மரண தண்டனைகளைக் கணடிக்கத் தவறி உள்ளனர். பிரான்ஸ் மட்டுமே இதுவரை வெளிப்படையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

முஸ்லிம் நாடுகள் எதுவும் இந்த விடயத்தில் வாய் திறக்கவில்லை. காரணம் சவூதி அரேபியாவை பகைத்துக் கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை. முஸ்லிம்களின் புனித வழிபாட்டுத் தலங்கள் மீது அது கொண்டுள்ள கட்டுப்பாடு, சவூதியிடம் இருக்கும் எண்ணெய் வள செல்வம், அமெரிக்காவிடமிருந்தும் ஐரோப்பாவிடமிருந்தும் அதற்கு கிடைத்து வரும் ஆதரவு என்பனவே இதற்கு பிரதான காரணங்களாகும்.

ஈரான் ஜனாதிபதி இப்றாஹிம் ரெய்ஸி இந்தத் தண்டனைகளை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

1920 களில் முதலாவது உலகப் போரில் பிரிட்டிஷ் ஆதிக்க சக்திகளாலும் சியோனிஸ சக்திகளாலும் துருக்கிப் பேரரசு வீழ்த்தப்பட்ட பின் அந்த சக்திகளின் ஆதரவோடு பதவியில் அமர்த்தப்பட்டவர்கள் தான் இன்றைய சவூதி ஆட்சியாளர்கள். அதன் பிறகு தான் பலஸ்தீனம் அபகரிக்கப்பட்டது. அன்று முதல் சவூதி அரசின் காவலர்களாக அமெரிக்காவும் ஐரோப்பாவும் இருந்து வருகின்றன.

ஜமால் கஷோகி சல்மானின் உத்தரவின் கீழ் தான் உயிரோடு துண்டாடப்பட்டார். இதை நன்றாக அறிந்தும் கூட அன்றைய அமெரிக்க ஜனாதிபதி 100 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுத ஏற்றுமதி ஒப்பந்தத்தை சவூதியுடன் செய்து கொண்டார். சவூதி அரேபியாவில் மனித உரிமைகளைப் பேணுவதை விட இந்த ஆயத பேரம் தான் அமெரிக்காவுக்கு முக்கியமானதாக இருந்தது.

சவூதி அரசு அமெரிக்கா, ஐரோப்பிய மற்றும் இஸ்ரேலிய படைகளோடு இணைந்து முஸ்லிம் நாடுகளுக்கு எதிரான தாக்குதல்களிலும் பங்கேற்று வருகின்றது. அத்தோடு இஸ்ரேலுடன் நெருங்கிய உறவுகளையும் பேணி வருகின்றது.

உலகம் முழுவதும் முஸ்லிம்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் பற்றி சவூதி அரசுக்கு எந்தக் கவலையும் இல்லை. சிரியா அகதிகளுக்கு சவூதி என்னதான் பணத்தைக் கொடுத்தாலும் அந்த அகதிகளின் பிள்ளைகள் இன்று குளிர் கால உச்சத்தில் புல்லைத் திண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதேநேரம் ஆப்கானிஸ்தானில் அவர்களுக்கு சொந்தமான பத்து பில்லியன் டொலர்களை திருப்பி வழங்க அமெரிக்கா மறுத்து வருவதால் உணவுப் பற்றாக்குறைக்கும் பஞ்சத்துக்கும் மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

அரச குடும்பத்தினதும் கோத்திரவாதத்தினதும் எண்ணக்கரு ஒன்றேயாகும் நாட்டிலுள்ள ஒட்டுமொத்த செல்வத்தையும் அதிகாரத்தையும் தாங்கள் மட்டுமே அனுபவிப்பது தான் இந்த சித்தாந்தம். ஆனால் இது முற்றிலும் இஸ்லாத்துக்கு முரணானது.
**(முற்றும்)**